# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986, ஆகஸ்ட் மாதம் 27 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1986, ஆகஸ்ட் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

***விலை : சதம் 90*** ***தபாற் செலவு : சதம் 75***

**1986 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

*[1986, ஆகஸ்ட் 27 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ. ஓ. 56/84

இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கான ஒரு சட்டம்.

முன்னுரை.

“இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று, அதன் உறுப்பினரால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதன்முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட நிறுவகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1986 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகத்தின் தற்போதைய கூட்டிணை உறுப்பினர்களாக உள்ளவர்களும், அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் கூட்டிணை உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும், அவர்கள் கூட்டிணை உறுப்பினர்களாக தொடர்ந்திருக்கின்றவரையில், (இதனகத்துப் பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறுவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன், அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் தற்றுணிபின்படி அதை மாற்றுவதற்கும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) நகர்த் திட்டமிடுதல் அறிவியலையும், கலையையும் அதன் எல்லா அம்சங்களிலும் மேம்படுத்தலும் முன்னேற்றுதலும் ;

2—எ 078493—3,285 (08/86)

(ஆ) இலங்கையில் நகர்த் திட்டமிடுதல் உயர்தொழிலின் நன்மதிப்பையும் நற்பெயரையும் சிறப்புறுவித்தலும், கட்டிக்காத்தலும் அத்துடன் அதன் பயனுடைமையைப் பொதுமக்களின் நன்மைக்கெனப் பரவலாக்குதலும் ;

(இ) இலங்கையில் நகர்த் திட்டமிடுதல் உயர்தொழிலுக்கும் வெளிநாட்டின் நகர்த் திட்டமிடுதல் குழுக்களுக்கும் இடையிலான இணைப்பொன்றாகச் சேவையாற்றுதல் ;

(ஈ) அரசாங்கத்திற்கும் இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள வேறு முகவராண்மைகளுக்கும், நகர்த் திட்டமிடுதல் பற்றிய உயர் தொழில்சார் அபிப்பிராயம் சம்பந்தமான மதியுரை நாடப்படும் போது, அத்தகைய மதியுரை கிடைக்கத்தக்கதாகச் செய்தல் ;

(உ) அதன் உறுப்பினர்களின் நலன்களையும், அந்தஸ்தையும், நலன்புரியையும், உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் அத்துடன் நகர்த் திட்டமிடுதல் உயர்தொழில் தொடர்பில் பொதுமக்களின் நலன்களையும் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் ;

(ஊ) இலங்கையில் புரியப்படுகின்ற அல்லது புரியப்படும் சாத்தியம் கொண்ட நகர்த் திட்டமிடுதல் உயர்தொழிலின் வேலையமைப்பை மேம்படுத்தலும், ஒழுங்குபடுத்தலும், அதற்கு அறிவுறுத்தல் வழங்குதலும் ;

(எ) இலங்கையில் நகர்த் திட்டமிடுதல் தொழில் சம்பந்தமான எல்லா வேலைக்கும் இதுநாள்வரையிலான தகவலையும் அறிவையும் பெற்றுக்கொள்ளுதலும், கிட்டிய சிறந்த வழிவகைகளை மேற்கொள்ளுதலும் ;

(ஏ) நகர்த் திட்டமிடுதல் அறிவையும், தொழில் புரிதலையும் முன்னேற்றுவதில் பங்களிக்கக்கூடியவாறான ஆய்வுகளையும், அத்தகைய வேறு எல்லா நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்லுதல் ;

(ஐ) சமுதாயத்தின் சிறப்புநலன் கருதி நகர, கிராமியப் பிரதேசங்களின் அழகியல், பொருளாதார, அறிவியல், சமூக அபிவிருத்தியை மேம்படுத்தல் ;

(ஒ) நகர்த் திட்டமிடுதல் கல்வியை முன்னெடுத்துச்செல்வதில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள வேறு ஏதேனும் உயர்கல்வி நிறுவகத்துடன் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுதல் ;

(ஓ) நகர்த் திட்டமிடுதல் கோட்பாட்டிலும் வழக்காறிலும் போதிய அறிவுள்ளவர்களெனக் கூட்டுத்தாபனத்தின் பேரவையைத் திருப்திப்படுத்தியுள்ளவர்களான அத்தகைய ஆட்களை மட்டுமே கூட்டுத்தாபனத்திற்குச் சேர்த்துக்கொள்வதன்மூலம் அங்கீகரிக்கப்பட்ட நகர்த் திட்டமிடுவோரை தொழிலுக்கமர்த்துவதில் சமுதாயத்திற்குள்ள நம்பிக்கையை அதிகரித்தல் ;

(ஔ) நகர்த் திட்டமிடுதல் தொடர்பிலும் இவற்றையொத்த விடயங்கள் தொடர்பிலுமான அறிவைப் பெறுவதற்கும் பரப்புவதற்கும் சந்தருப்பங்களை ஏற்பாடுசெய்தலும், அத்தகைய அறிவைப் பெறுவதற்கும் பரப்புவதற்கும் என நூலகங்களையும் வேறுதோதான சாதனங்களையும் தாபித்தலும், ஒழுங்குபடுத்தலும், பேணிவருதலும் ;

(க) கூட்டுத்தாபன உறுப்பாண்மைக்கான தகைமைகளையும் தகைமையீனங்களையும் அத்துடன் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் பேணிவரப்படவேண்டிய உயர்தொழில்வழி நடத்தை நியமங்களையும் விதித்துரைத்தல் ; அத்துடன்

(ங) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான, அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அல்லது அவற்றை நிறைவேற்றுவதற்கு அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்,

உறுப்பாண்மைத் தரங்கள், பட்டங்களைப் பயன்படுத்தல் முதலியன.

4. (1) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மை பின்வரும் தரங்களை உடையதாயிருத்தல் வேண்டும் :—

(அ) இணைவுறுப்பினர்கள்,

(ஆ) உறுப்பினர்கள்,

இவர்கள் இச்சட்டத்தில் " கூட்டிணை உறுப்பினர்கள் " எனக் குறிப்பீடு செய்யப்படுவார்கள் ;

(இ) சேர்வுறுப்பினர்கள், அத்துடன்

(ஈ) மாணவர்கள்,

இவர்கள் இச்சட்டத்தில் " கூட்டிணையா உறுப்பினர்கள் " எனக் குறிப்பீடு செய்யப்படுவார்கள்.

(2) கூட்டிணை உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் பேரவைக்கும் ஏதேனும் குழுவுக்கும் அல்லது சபைக்கும் தெரிவுசெய்யப்படுவதற்கும் அல்லது நியமிக்கப்படுவதற்கும் தகவுடையவராதல் வேண்டும் என்பதுடன், கூட்டங்களின் போது வாக்களித்தல் உள்ளிட்ட எல்லா உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபன விதிகளின் நியதிகளின்படி கூட்டிணை உறுப்பினர்களின் உறுப்பாண்மை பயனுறுத்தப்பட்டிருந்தால் மட்டுமே பதவிப் பெயர்கள் அல்லது பதவிப் பெயர்ச் சுருக்கங்கள் பயன்படுத்தப்படலாம் என்னும் நிபந்தனைகளுக்கமைவாக, கூட்டிணை உறுப்பினர்கள் தங்களுக்

குத் தோதாகவுள்ள பின்வரும் பதவிப்பெயர்களை அல்லது பதவிப்பெயர்ச் சுருக்கங்களை தங்கள் பெயர்களை அடுத்துப் பிரத்தியேகமாகப் பயன் படுத்துவதற்கு உரித்துடையவர்களாதல் வேண்டும். அதாவது :—

இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகத்தின் இணையுறுப்பினர் :
ந. தி. நி. இ. (இலங்கை)

இலங்கை நகர்த் திட்டமிடுவோர் நிறுவகத்தின் உறுப்பினர் :
ந. தி. நி. உ. (இலங்கை)

(4) கூட்டிணையா உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பொதுக் கூட்டங்களின்போதும் சமூகமளித்திருப்பதற்கும், அக்கூட்டங் களில் பங்குபற்றுவதற்கும் உரித்துடையவர்களாதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டங்களின்போது வாக்களிப்பதற்கோ, ஏதேனும் சிறப்புப் பொதுக் கூட்டத்தைக் கூட்டும்படி கோருவதற்கோ அல்லது அவ்வாறு கோருவதில் கலந்துகொள்வதற்கோ, கூட்டுத்தாபனத்தின் பேரவையில் அல்லது ஏதேனும் குழுவில் அல்லது சபையில் பதவி வகிப்பதற்கோ நிய மிக்கப்படுவதற்கோ உரிமையுடையவராதல் ஆகாது.

உறுப்பாண்மைக்கான தகைமையீனங்களும் ஒழுக்காற்றுத் தத்துவங்களும் நடவடிக்கை முறையும்.

5. (1) ஆளெவரும்—

(அ) இலங்கையிலாயினுஞ்சரி வேறெங்கேயாயினுஞ்சரி தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவரென தீர்ப்பளிக்கப் பட்டிருந்தால் ;

(ஆ) இலங்கையிலாயினுஞ்சரி வேறெங்கேயாயினுஞ்சரி தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அவர் கடனிறுக்க வகையற்றவரென அல் லது வங்கிமுறிந்தவரென தீர்ப்பளிக்கப்பட்டு அத்தகைய கடனி றுக்க வகையின்மை அல்லது வங்கிமுறிவு தவிர்க்கமுடியாத நட் டங்களினால் அல்லது துரதிஷ்டவசத்தினால் முழுவதாகவோ அல்லது பகுதியளவாகவோ ஏற்பட்டதென்னும் பயன்பட அமைந்த சான்றிதழொன்று அத்தகைய நீதிமன்றத்தினால் அவ ருக்கு வழங்கப்பட்டில்லாதிருந்தால் ; அல்லது

(இ) இலங்கையிலாயினுஞ்சரி வேறெங்கேயாயினுஞ்சரி தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் மறி யற்றண்டனையினால் அல்லது அதையொத்த தண்டனையினால் தண் டிக்கப்படற்பாலதுமான ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டிருந்தால்,

கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படலாகாது.

(2) இப்பிரிவின் ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்தி களில் குறித்துரைக்கப்பட்ட தகைமையீனங்களுள் எதற்கேனும் ஆளா கும் உறுப்பினரெவரையும் பேரவை பெயர் நீக்குதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என் னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் பெயர் நீக்கஞ் செய்யப்பட்ட எவரே னும் உறுப்பினர் அத்தகைய தகைமையீனத்திற்கு ஆளாகியமை இல்லா தொழியின், அல்லது பேரவையின் அபிப்பிராயப்படி அவரது குணநலனை மீளப்பெற்றுள்ளதோடு நகர்த் திட்டமிடுபவராகத் தொழில் புரிவதற்குத் தகுந்தவராயுமிருந்தால், பேரவையானது அதனது தற்றுணிபில் அவரை மீளவும் சேர்த்துக்கொள்ளலாம்.

(3) தொழில்வழியிலான பிறழ் நடத்தைக்கு அதனது அபிப்பிராயப்படி குற்றவாளியாயுள்ள உறுப்பினரெவரையும் பேரவை பெயர் நீக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், பேரவையானது பெயர் நீக்குவதற்குப் பதிலாக அத்தகைய உறுப்பினரை எச்சரித்துவிடலாம் அல்லது சூழ்நிலைகள் யாவற்றிலும் நியாயமும் ஒப்புரவும் ஆனதென பேரவை கருதுகின்றவாறாக ஓராண்டுக்கு மேற்படாத அத்தகைய காலத்துக்கு உறுப்பாண்மையிலிருந்து அவரை இடைநிறுத்திவைக்கலாம் ; ஆயின் மேலும் பேரவையின் அபிப்பிராயப்படி அவரது குணநலனை அவர் மீளப்பெற்றுள்ளதோடு நகர்த் திட்டமிடுபவராகத் தொழில் புரிவதற்குத் தகுந்தவராயுமிருந்தால் பேரவையானது அதனது தற்றுணிபில் அவரை மீளவும் சேர்த்துக்கொள்ளலாம்.

(4) அத்தகைய உறுப்பினர் மேற்சொல்லப்பட்ட தகைமையின்மைகளுள் எதற்கேனும் ஆளாகியுள்ளாரென அல்லது தொழில்வழி பிறழ் நடத்தைக்குக் குற்றவாளியாகியுள்ளாரென, பேரவையால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழு விசாரணையின் பின்னர் பேரவைக்கு அறிக்கை செய்திருந்தாலன்றி, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் உறுப்பினரை பேரவை பெயர்நீக்கஞ் செய்தலாகாது, உறுப்பாண்மையிலிருந்து இடைநிறுத்திவைத்தலாகாது அல்லது எச்சரித்தலாகாது.

6. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும். அவையாவன :— கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தற்கும் கொடுத்தற்கும், ஈடுவைப்பதற்கும், அடகுவைப்பதற்கும், விற்பனை செய்வதற்கும், கொடுத்துமாற்றுவதற்கும் அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும் ஆன தத்துவம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும், நேரடியாகவாயினுஞ்சரி அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவாயினுஞ்சரி செய்துகொள்ளுவதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுதற்கும் ஆன தத்துவம் ;

(இ) அதன் நிதிகளை முதலீடுசெய்வதற்கும், கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறைக் கணக்குகளையும், வைப்புக் கணக்குகளையும், சேமிப்புக் கணக்குகளையும் பேணிவருவதற்கும் ஆன தத்துவம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக, அது பொருத்தமானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் பணம் முற்பணமாக வழங்குவதற்கும் அல்லது பணம் கடன் வழங்குவதற்கும் அத்துடன் பணம் கடன்பெறுதற்கும் ஆன தத்துவம் ;

(ஊ) உறுப்பாண்மை, உறுப்பாண்மைக்குச் சேர்த்துக்கொள்ளுதல், கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகளுக்கும், பரீட்சைகளுக்கும் அனுமதித்தல் ஆகியன தொடர்பில் கட்டணங்களை விதித்துரைத்து அறவிடுவதற்கான தத்துவம்;

(ஊ) நகர்த் திட்டமிடுவோராகத் தகைமைபெற விரும்பும் ஆட்களைச் சேர்ப்பதற்கான நியதி நிபந்தனைகளை உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் விதித்துரைத்தற்கான தத்துவம்;

(எ) அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தற்கும் தொழிலுக்கமர்த்தற்கும் இடமாற்றுதற்கும் பதவி விலக்குதற்கும், அவர்களுக்கு எதிராக வேறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தற்கும் அத்துடன் அவர்களது சேவை நியதி, நிபந்தனைகளை விதித்துரைத்தற்கும் ஆன தத்துவம்; அத்துடன்

(ஏ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமானவாறுன, அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்குகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும், காரியங்களையும் செய்தற்கான தத்துவம்.

கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமை.

7. (1) கூட்டுத்தாபன அலுவல்களின் நிருவாகமும் முகாமையும், கூட்டுத்தாபன விதிகளுக்கமைய, பேரவையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் இப்பேரவை இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்திற்குள்ள பணிகளையும், கடமைகளையும் புரிதல் வேண்டும் என்பதுடன், தத்துவங்களைப் பிரயோகிக்கவும் செய்யலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் பேரவையானது கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படுகின்றவர்களான அல்லது நியமிக்கப்படுகின்றவர்களான பதவி தாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை இச்சட்டம் தொடங்கும் நேரத்தில் பதவி வகிக்கும் நிறுவகத்தின் பேரவையாகவிருத்தல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவம்.

8. (1) பேரவையானது பொதுக்கூட்டம் எதிலும் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குகள்கொண்டு இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமென்று தேவைப்படுத்தும் ஏதேனும் விடயம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்று ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் மாற்றப்படலாம், அவற்றுக்குச் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம், அல்லது ஒழிக்கப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினால் வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பேரவை—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், உறுப்பினர்களாகப் பதவி துறத்தல் விலக்குதல், உறுப்பாண்மைக்கான தகைமைகளும், தகவீனங்களும், உறுப்பினர்களின் இடாப்பைப் பேணுதல், உறுப்பாண்மைக் கட்டணத்தைச் செலுத்தாமையின் விளைவு, அதனைத் தீர்த்துவிடல் அல்லது அதனைக் குறைத்தல், அத்துடன் உறுப்பினர்களின் உரிமைகள், சிறப்புரிமைகள் தத்துவங்களும் ;

(ஆ) பேரவையின் பதவிக்காலம், அதற்குத் தெரிந்தெடுக்கப்படுவதற்கான அல்லது நியமிக்கப்படுவதற்கான தகவும், மாதிரியும் அதன் உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகல் அல்லது பதவியை வறிதாக்கலும் அமய வெற்றிடங்களை நிரப்புதலும், பேரவையின் தத்துவங்களையும் பணிகளையும் கையளித்தலும், கூட்டுத்தாபனத்தின் குழுக்களையும் சபைகளையும் நியமித்தலும், பேரவையின் ஆண்டறிக்கை ;

(இ) பேரவைக் கூட்டங்கள், ஆண்டுப் பொதுக்கூட்டங்கள், கூட்டுத்தாபன உறுப்பினர்களின் ஏனைய பொதுக்கூட்டங்களும் விசேட பொதுக்கூட்டங்களும் ஆகியவற்றைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களுக்கான அறிவித்தல், நிகழ்ச்சி நிரல் என்பனவும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அங்கு அலுவல்களைக் கையாளுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை முகாமைசெய்தலும் அதன் நிதிகளுக்கான கட்டுக்காப்பும் ;

(உ) தொழில்வழி நடத்தைக் கோவையொன்றை வகுத்தமைத்தல் ;

(ஊ) ஒழுக்காற்றுக் குழுக்களின் நியமனமும் அவற்றுக்குரிய சட்ட உதவிக்கான ஏற்பாடும் உட்பட ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பிலான நடவடிக்கைமுறை முறைப்பாட்டுப் படிவம், குற்றச்சாட்டுகளை வகுத்தல், மறுமொழியாக விளக்கம் கொடுத்துதவுதல், அறிவித்தல்கள் வழங்குதல், சான்றளிப்பதற்கும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கும் ஆட்களை அழைத்தல், சட்டப் பிரதிநிதிகளைப் பெறத் திறத்தவர்களுக்குள்ள உரிமைகள், அவற்றுக்கு ஏற்புடையனவாகும் சான்றுவிதிகள், அங்கு நடைபெறும் நடவடிக்கைகளின் பதிவேடுகளைப் பேணுதல், ஒழுக்காற்றுக் குழுக்களினது அறிக்கைகளின் படிவமும் உள்ளடக்கமும்,

என்பன தொடர்பில் இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய விதிகளுக்கமைந்தவர்களாதல் வேண்டும்.

பட்டங்களைப் பயன்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள் முதலியன.

9. (1) ஆள் எவரும், 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதும், அவ்வுட்பிரிவின்கீழ் கூட்டிணை உறுப்பினர்களின் வகுப்பைச் சேர்ந்த ஏதேனும் தரத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவர் மட்டுமே சூட்டிக்கொள்ளக்கூடியதும் அல்லது பயன் படுத்தக்கூடியதுமான ஏதேனும் பதவிப் பெயரை அல்லது பதவிப் பெயர்ச் சுருக்கத்தை, அத்தகைய ஆள் அப்போதைக்கு அந்தத் தரத்தில் உறுப்பினரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தாலொழிய சூட்டிக் கொள்ளுதலோ, பயன்படுத்துதலோ ஆகாது.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கான குற்ற வழக்கு எதுவும், பேரவையினால் அந்நோக்கத்துக்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பேரவையின உறுப்பினரொருவராற்றவிர தொடரப்படுதலாகாது.

நிறுவகத்திடமிருந்து செல்மதியாகவுள்ளனவும், அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான தனிசுகள்.

10. இச்சட்டம் தொடங்கும் நேரத்தில் நிறுவகத்துக்குள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் அல்லது தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

11. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பேரவையினது தீர்மானமொன்றின் அதிகாரத்துடனும், பேரவையின் இரு உறுப்பினர்கள் அத்துடன் செயலாளர் அல்லது பேரவையினால் அந்நோக்கத்துக்கென அதிகாரமளிக்கப்படவேண்டிய அத்தகைய வேறு ஆள் ஆகியோரதும் முன்னிலையிலும் அன்றி, எத்தகையதுமான எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

12. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களிலிருந்து, அவர்கள் மூலம் அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ, பாதித்தலோ ஆகாது.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.*